*8*

# உயிருள்ள விசுவாசம் [2:14–26]

கலோரி - உணர்வு உள்ள எவரையாவது நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? அமெரிக்கா உண்மையிலேயே கலோரி உணர்வுள்ள நாடாக இருக்கிறது! பலசரக்குக் கடைகள், "குறைந்த கலோரி" கொண்ட உணவுப் பொருள்கள் மற்றும் பானங்களுக்கென்று பெரிய பகுதிகளைக் கொண்டுள்ளன. மென்பானங்கள் உற்பத்தி செய்பவர்கள், உணவுக்கட்டுப்பாட்டுப் பானங்கள் மற்ற சாதாரண பானங்கள் பலவற்றைவிட அதிகம் விற்பனையாவதாகக் கூறுகின்றனர். ஆனால் கலோரி என்றால் என்ன? தொழில்நுட்ப ரீதியாகப் பேசுவதென்றால், ஒரு கலோரி என்பது உணவிலுள்ள சக்தியின் அளவு ஆகும். நடைமுறையில் பேசுவதென்றால், ஒரு கலோரி எனபது பவுண்டுகளையும் அங்குலங்களையும் கூட்டுகிறதான அச்சுறுத்தும் பொருட்கூறாக உணவு மற்றும் பானங்களில் உள்ளது. ஆனால் நீங்கள் எப்போதாவது ஒரு கலோரியைக் கண்டிருக்கிறீர்களா? கண்டிருக்க மாட்டீர்கள், ஏனென்றால் அதைச் சாதாரணக் கண்ணால் காண இயலாது. *ஆனால் நாம் யாவருமே கலோரியின் விளைவைக் கண்டிருக்கிறோம்!*

இவ்வாறாக, விசுவாசம் என்பது ஒரு கலோரியுடன் ஒப்பிடப்பட முடியும். விசுவாசம் என்பது கிறிஸ்தவருக்கு கிறிஸ்தவ வாழ்விற்குமான "திறவுகோல்" போதனையாக உள்ளது (எபேசியர் 2:8, 9; 2 கொரிந்தியர் 5:17; எபிரெயர் 11:6; ரோமர் 14:23). யாக்கோபு நிருபத்தின்படி, நாம் விசுவாசத்தைக் காண முடியாது, ஆனால் விசுவாசத்தின் விளைவானது சுலபமாக உற்றுநோக்கப்பட முடியும். பல மக்கள் விசுவாசம் கொண்டுள்ளதாக அறிக்கையிட்டதை யாக்கோபு கேள்விப்பட்டிருந்தும், அவர்களின் விசுவாசத்தினுடைய விளைவைக் காணுதல் என்பது கடினமாக இருந்தது என்பது தெளிவு. விசுவாசம் மற்றும் செயல்கள் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு உறவைக் காண யாக்கோபு விரும்புகிறார். விசுவாசம் என்பது செயல்விளக்கப்படுத்தப்படவேண்டும்.

யாக்கோபு 2:14-26 வசனப்பகுதியில் யாக்கோபு நமக்காகக் கொண்டிருந்த அர்த்தத்திற்காக அவ்வசனப் பகுதியை நாம் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்வதற்கு முன்னர் இவ்வசனப் பகுதியைப் பற்றி மொத்தத்தில் ஒரு விளக்கம் ஏற்படுத்தப்பட்டாக வேண்டும். இது, யாக்கோபுவும் பவுலும் ஒருவருக்கொருவர் எதிராக நின்றனர் என்று நிரூபிக்க, அடிக்கடி பயன்படுத்தும் வசனமாக உள்ளது. ரோமர் 3:28 மற்றும் கலாத்தியர் 2:16 ஆகியவை, "செயல்கள்" இரட்சிப்பின் பாகமாக இருந்தன என்று பவுல் நம்பவில்லை என்று காண்பிக்கப் பயன்படுத்தப்படும் வசனங்களாக உள்ளன; அதே வேளையில், யாக்கோபு 2:14-26ல் யாக்கோபு, செயல்கள் எவ்வளவு அத்தியாவசிய மானவைகளாக உள்ளன என்பது பற்றிப் பேசுகிறார். அவர்களிடையில் முரண்பாடாகக் காணப்படும் இவ்விஷயம்பற்றி விளக்கம் அளிக்கையில், அலெக்சாண்டர் ராஸ் என்பவர், "அவர்கள் தங்கள் பட்டயங்களுடன் ஒருவருக்கொருவர் எதிர் நின்ற, பகைவர்களாக இருக்கவில்லை; அவர்கள்

பின்னுக்குப் பின்னாக நின்றுகொண்டு, சுவிசேஷத்தின் விரோதிகளை எதிர்த்துக் கொண்டிருந்தனர்" என்று கூறியுள்ளார். பவுல், தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்படுவதற்கு கிரியைகள் அவசியமாயிருந்தன என்று வலியுறுத்திய யூதச் சட்டவியலாளர்களை எதிர்த்து நின்றார், அதேவேளையில் யாக்கோபு, இயேசுவுடனான உறவை அறிக்கையிட்டு, ஆனால் அன்றாட வாழ்வில் அந்த உறவின் செயல்விளைவைக் குறைத்துப் போட்டு இருந்தவர்களுடன் எதிர்த்து நின்றார். தொடக்கநிலையில் உள்ள வேறுபாடு என்பதே யாக்கோபு மற்றும் பவுல் ஆகியோருக்கு இடையிலான வேறுபாடாக உள்ளது. பவுல், தேவனுடைய மன்னிப்பு என்ற மாபெரும் அடிப்படை உண்மையுடன் தொடங்குகிறார், இதை எந்த ஒரு மனிதரும் ஈட்டவோ, வெற்றிகொள்ளவோ அல்லது இதைப் பெறத் தகுதியானவராகவோ இருக்க இயலாது. யாக்கோபு, தாம் கிறிஸ்தவர் என்று கூறிக்கொள்ளும் கிறிஸ்தவரைக் கொண்டு தொடங்குகிறார், மற்றும் அவர், ஒரு மனிதர் தமது செயல்களினால் தமது கிறிஸ்தவத்தை நிரூபிக்காது இருந்தால், அவர் கிறிஸ்தவரே அல்ல என்று வலியுறுத்துகிறார். ஆகவே, யாக்கோபுவும் பவுலும் ஒருவருக்கொருவர் நேர் மாறாக நிற்பதில்லை; அவர்கள் ஒருவர் கூறும் கருத்திற்கு இன்னொருவர் கூடுதலாகக் கருத்துக் கூறுதல் என்பதை மாத்திரமே செய்கின்றனர். இவ்விருவரின் செய்தியும், கிறிஸ்தவ விசுவாசத்தின் மிகமுழுமை யான வடிவத்திற்கு அத்தியாவசியமானவைகளாக உள்ளது.

## விசுவாசம் விசுவாசமாக இராதபோது (2:14-17)

வேதவசனத்தின் இப்பகுதியானது, மிகவும் திடீரென்று ஒரு கேள்வியுடன் தொடங்குகிறது. அறிக்கையிடும் கிறிஸ்தவர்கள் தங்கள் அறிக்கையைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார். அவர், "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?" என்று கேட்கிறார் (2:14). விசுவாசிகள், செயல் களைக் காண்பிக்காத அறிக்கையிடும் விசுவாசத்தின் தனிப்பட்ட மதிப்பைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும் என்று அவர் அறைகூவல் விடுக்கிறார். "சொல்லியும்" என்ற வார்த்தையின்மீது யாக்கோபு வலியுறுத்தம் வைக்கிறார் என்பது தெளிவு. அர்ப்பணித்துள்ள கிறிஸ்தவரின் அறிக்கையைக் காட்டிலும் அதிக அழகு நிறைந்த அறிக்கையை இந்த உலகம் காண்பதில்லை. ஆனால் அவர்களின் விசுவாசத்தில் இருந்து உண்டாக்கப்பட்ட "செயல்கள்" இல்லாத நிலையில் அது எவ்வளவு அர்த்தம் நிறைந்ததாக உள்ளது? அவர்களின் விசுவாசம் என்பது, வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் அதிகமானதாக இராததாக இருந்தால், அது இரட்சிக்க வல்லமை அற்றதாக உள்ளது என்று யாக்கோபு கூறுவார்.

யாக்கோபு தமது கருத்தைத் தெளிவாக்குவதற்காக, ஒரு உதாரணத்தைக் கொடுக்கிறார்:

> ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக்

*கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? (2:15, 16).*

*நலமாயிருத்தலுக்கான வார்த்தைகளை அளித்து, ஆனால் உணவு அல்லது உடை ஆகியவை பற்றி ஏதொன்றும் செய்யாத நபர், உண்மையில் ஒன்றும் செய்திருப்பதில்லை. நாம் இவ்வகையில் எப்போதாவது குற்றப்பட்டிருக்கக் கூடுமா? நோய்கொண்டவர்கள், பசியாக இருப்பவர்கள் மற்றும் வீடு இல்லாதவர்கள் ஆகியோருக்காக நாம் ஜெபிக்கும்போது, அவர்களுக்கு சேவை செய்வதற்காக நாம் எதையாவது செய்கிறோமா? நாம் நமது விசுவாசத்தை அறிக்கையிட்டும், அதை நடைமுறைப்படுத்தாது இருப்பதால் குற்றப்பட்டு இருப்பதில்லையா? நாம் நமது ஏர் - கண்டிஷன் செய்யப்பட்ட வகுப்பறையில் உட்கார்ந்து கொண்டு மாத்திரம் நமது விசுவாசத்தை வெளிப்படுத்தினால், நமது விசுவாசத்தை அறிக்கையிட்டு அதை நடைமுறைப்படுத்தாத வகையில் நாம் குற்றப்பட்டு இருப்பதில்லையா?*

அதனால்தான் யாக்கோபு, "அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" என்று கூறுகிறார் (2:17). ஒரு தனிநபரின் விசுவாசம் உண்மையானதா மற்றும் உயிருள்ளதா என்று மதிப்பிடுவதற்கு, செயல் மாத்திரமே ஒரே வழியாக உள்ளது. இந்தக் கருத்தை வலியுறுத்துவதில் யாக்கோபு, இந்தப் புத்தகம் முழுவதிலும் மேலோங்கியிருக்கும் செய்திகளில் ஒன்றை அடிக்கோடு இடுகிறார் - *கிறிஸ்தவமானது உண்மையானதாக இருக்க நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.*

## ஒரு மறுப்புக்குப் பதில் அளிக்கப்பட்டது (2:18-20)

இந்த இடத்தில் யாக்கோபு, தமது வாதத்தை மறுப்பவராக இருக்கும் கற்பனையான எதிராளியின் கண்ணோக்கை அறிமுகப்படுத்துகிறார். மறுப்பாளரின் விவாதம் பின்வருவது போன்று செல்வதாக இருக்கும்: "நாம் யாவருமே மாறுபட்டவர்களாக இருக்கிறோம் - மற்றும் நீங்கள் அந்த உண்மையை நிச்சயமாகவே மதிக்கிறீர்கள். மக்களில் சிலர், மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் செயல்விளக்கம் உடையவர்களாக இருந்து விடுதல் என்பது நடைபெறுகிறது. நம்மில் உள்ள மற்றவர்கள் அதிகம் கூச்சசுபாவம் உடையவர்களாக இருக்கிறோம். நீங்கள் வெளிப்படையாகக் காண்பிப்பவர்களாக இருக்கும் காரணத்தினால், உங்கள் விசுவாசத்தை நீங்கள், செயலில் அதிகமாகக் காண்பிக்க முடிகிறது. இதற்கு மறுபுறத்தில், நம்மில் உள்ள மற்றவர்கள் விசுவாசத்தை எங்களுக்குள்ளே அதிகமாக வைத்துக் கொள்கிறோம், ஆனால் அது இன்னும் விசுவாசமாகவே உள்ளது." யாக்கோபு, அந்த விவாதம் முழுவதுமே ஒரு தவறான கருத்தை ஆதாரமாகக் கொண்டு அமைந்துள்ளது என்று அந்த விவாதத்திற்குப் பதில் அளிப்பார். நமது வாழ்வைக் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் வாழுதல் பற்றிய விஷயத்தில், விசுவாசமும் செயல்களும் பிரிக்கப்பட இயலாதவைகளாக உள்ளன. தேவன் அவற்றை ஒன்றாக இணைத்துள்ளார். ஆகவே, இது மக்களில் சிலர் தங்கள் விசுவாசத்தில் மிகச்சிறந்தவர்களாக இருக்கின்றனர் மற்றும் பிறர் தங்கள் செயல்களில் மிகச்சிறந்தவர்களாக இருக்கின்றனர் என்பது பற்றிய விஷயமாக இருப்பதில்லை. விசுவாசமும் செயல்களும் கைகோர்த்துச் செல்கின்றன! 18ம் வசனத்தில் யாக்கோபு, "உண்மைநிலைக்கு" இறங்கிச் செல்கிறார் மற்றும், மறுப்பாளரின் விசுவாசம் காண்பிக்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்.

விசுவாசம் என்ன செய்கிறது என்பதைக் கொண்டு மாத்திரமே அந்த விசுவாசம் காண்பிக்கப்பட முடியும் என்பதை அவர் அறிந்திருந்த காரணத்தினால் அவர் இதைச் செய்கிறார்!

கடைசியாக யாக்கோபு, தமது கருத்தின் விவரிப்பாக பிசாசுகள் செய்வதைப் பயன்படுத்துதல் மூலம், மனநிறைவான தமது மறுப்பாளர்களை அதிர்ச்சியடையச் செய்கிறார் (2:19). மறுப்பாளர்கள் எதை விசுவாசிக்கின்றனர்? அவர்கள் ஒரே தேவன் இருப்பதையும் இயேசுவின் தெய்வீகத்துவத்தையும் விசுவாசிக்கின்றனர். *எனவே என்ன?* பிசாசுகளும் அதைச் செய்கின்றன! நம்புதல் மற்றும் நடுங்குதல் என்பதைக் காட்டிலும் அதிகமான விசுவாசத்தைத் தேவன் விரும்புகிறார் மற்றும் எதிர்பார்க்கிறார். ஒரு நபர் தமது சிந்தையில் ஒளியூட்டப்பட்டிருக்கக்கூடும், தமது இருதயத்தில் தூண்டுதல் பெற்றிருக்கவும் கூடும், மற்றும் அப்படிப்பட்ட நிலையிலும் நித்தியத்திற்கும் இழந்துபோகப் பட்டிருக்கக்கூடும். தேவன் விரும்புகிற விசுவாசமானது இன்னும் அதிகமான விஷயங்களைக் கொண்டதாக உள்ளது, அது - கீழ்ப்படிதல் உள்ள, மாற்றப்பட்ட வாழ்வு என்ற வகையில் - காணப்பட மற்றும் புரிந்துகொள்ளப்படக் கூடியதாக இருக்கிறது.

## எபிரெய வரலாற்றில் இருந்து நிரூபணங்கள் (2:21-26)

யாக்கோபு இப்போது, தமது வாசகர்களுக்கு மாபெரும் எடையைச் சுமந்தாக வேண்டிய நிரூபணங்களுக்கு, அதாவது பழைய ஏற்பாட்டில் தேவன் தமது மக்களிடத்தில் எதிர்பார்த்திருந்த விஷயங்களுக்குத் திரும்புகிறார். யாக்கோபு 2:20 வசனமானது, இந்தப் பாடக்கருத்தை, அவர் இன்னமும் தமது கற்பனையான எதிராளியிடத்தில் விவாதிக்கிறார் என்ற நோக்கிலேயே ஏறக்குறைய அறிமுகப்படுத்துகிறது. நிரூபணத்தின் இரு சாட்சியங்களிலும், தனிநபர்கள் இயல்பான மனித இரக்கத்தினால் மாத்திரமின்றி தேவன்மீது கொண்டுள்ள பலத்த விசுவாசத்தினால் செயல்படும்படி இயக்கப்படுகின்றனர்.

21 முதல் 24 வரையுள்ள வசனங்களில் யாக்கோபு, ஆபிரகாமின் வாழ்வில் இருந்து சாட்சியத்தை அளிக்கிறார். ஆபிரகாம், "யூத மக்களினத்தின் தகப்பன்" என்றும் "விசுவாசமுள்ளவர்களுக்குத் தகப்பன்" என்றும் அறியப்பட்டிருந்தார். ஆபிரகாம் தேவன்மீதான இந்த நம்பிக்கை வைத்தல், கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசித்தல் ஆகியவற்றின் மேம்பாட்டுடன் போராடினார். அவரது வாழ்வின் முந்திய காலத்தில் போராட்டத்தின் எல்லா சாட்சியங்களைப் பற்றியும் நினைத்துப் பாருங்கள்: அவர் அழைக்கப்பட்டதற்கு அரைவழியில் கீழ்ப்படிதல், பாலஸ்தீனத்தில் பஞ்சம் ஏற்பட்ட போது எகிப்துக்கு ஓடிப்போகுதல், எகிப்தில் இருந்த வேளையில், சாராளுடன் தமக்கிருந்த உறவுமுறைகளைப் பற்றிப் பொய் கூறுதல், மற்றும் அவரது மனைவி ஒரு குழந்தையைப் பெறுவாள் என்று தேவன் கூறியதைப் பற்றிச் சிரித்தல். ஆபிரகாம் விசுவாசத்தின் இந்த உதாரணத்திற்குள் வளர்ந்தார். யாரோ ஒருவர், யாக்கோபின் கருத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுவதன் மூலம் நன்கு விளக்கியிருக்கிறார்: "ஆபிரகாம், விசுவாசம் மற்றும் செயல்கள் ஆகியவற்றினால் இரட்சிக்கப்படவில்லை, ஆனால் செயல்படுகிற விசுவாசத்தின் மூலமாகவே இரட்சிக்கப்பட்டார்." ஆபிரகாம் தமது விசுவாசத்தைத் தமது வாழ்வில் செயல்விளக்கப்படுத்திய காரணத்தால், அவரது விசுவாசத்தைப் பற்றிச் சந்தேகம் எதுவும் நிலவுவதில்லை.

*ராகாபின் செய்கைகளில் செயல்விளக்கப் படுத்தப்பட்ட விசுவாசமே, யாக்கோபு அளிக்கும் இரண்டாவது சாட்சியமாக உள்ளது. ராகாப், ஒரு "செத்த" விசுவாசத்தை, வெறும் அறிவுப்பூர்வமான அனுபவத்தை மாத்திரம் கொண்டிருந்து, வேவுகாரர்களுக்கு ஒன்றும் செய்யாதிருந்தாளா? அவர் தனது மனதை ஒளியூட்டி, உணர்வுகளைத் தூண்டிய விசுவாசத்தைக் கொண்டிருந்து, ஆனால் இன்னமும் வேவுகாரர்களுக்கு ஏதொன்றையும் நிறைவேற்றாமல் இருந்தாளா? ராகாப், "உயிருள்ள" விசுவாசத்தைக் கொண்டிருந்தாள் என்பதே இவ்வரலாற்றின் அழகாக உள்ளது. அவள் தான் செயல்புரிந்த வகையில், தான் விசுவாசித்தது என்ன என்பதை நிரூபித்தாள். அவள் இஸ்ரவேல் மக்களின் யெகோவா மீது விசுவாசம் கொண்டிருந்தாள்; அவள் வேவுகாரர்களைக் காப்பாற்றி அவர்களை வேறொரு வழியாக நகரத்தை விட்டு வெளியே அனுப்பி வைத்தாள்.*

## முடிவுரை

*யாக்கோபு தமது கலந்துரையாடலைப் பின்வருமாறு கூறி முடிக்கிறார்: "அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" (2:26). ஒரு ஜுரியின் முன்னால் நிற்கும் ஒரு வழக்கறிஞர், அல்லது மக்கள் கூட்டத்தின் முன்னால் நிற்கும் வாதம் செய்பவர் ஒருவரைப் போன்று, யாக்கோபு, தாம் முன்வைத்திருக்கும் விவாதத்தின் தொகுப்புரையைக் கொடுக்கிறார். உடலும் ஆவியும் பிரிக்கப்பட்டு இருக்கும்போது, மரணமும் அழிவும் விளைவாகிறது, அதைப்போன்றே, விசுவாசமும் அதைச் செயல்களினால் செயல்விளக்கப்படுத்துதலும் பிரிக்கப்பட்டு இருக்கும்போது, விசுவாசம் இறந்து அழிகிறது.*

*கிறிஸ்தவம் என்பது உண்மையானதாக இருக்க வேண்டுமானால், அது நடைமுறைக்கு உரியதாகவும் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் இருக்க வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார்!*